**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**S.T.C.No. 304/2024**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Pw1 |
| Name | : கன்னியப்பன் |
| Father/Husband's Name | : ஏழுமலை |
| Village | கூடுவாஞ்சேரி |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18.06.2026.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எதிரியின் முகவரி எனக்கு தெரியுமா என்றால் வால்மீகி நகர், ஓட்டேரியில் வசிக்கிறார். நானும், எதிரியும் பக்கத்து பக்கத்து தெருவில் தான் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். பணம் வாங்கும் போது நான் ஓட்டேரியில் வசித்திருந்தேன். புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் நான் வசித்த ஓட்டேரி முகவரியை சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. நானும் எதிரியும் பக்கத்து பக்கத்து தெருவில் வசித்திருந்ததால் எனக்கு எதிரியை தெரியும். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் கம்பெனிக்கு வேலைக்கு சென்றிருந்ததாக எனக்கு தெரியும், அவர் என்ன தொழில் செய்திருந்தார்

என்று எனக்கு தெரியாது. எதிரி சீட்டு நடத்தி வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. எதிரி சீட்டு தொழில் நடத்தி வருவதில் நான் சீட்டு பணம் போட்டால் எனக்கு எதிரியை தெரியும் என்றாலும், எனக்கும் எதிரிக்கும் நிறைய பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றாலும் சரியல்ல. சீட்டு தொழில் எதிரி செய்ததின் மூலம் எனக்கு அவரை தெரிய வந்ததால் அது சம்மந்தமாக அவரது வீட்டிற்கு நான் செல்வது வழக்கம் என்றாலும், அந்த சமயத்தில் எதிரிக்கு தெரியாமல் அவரது காசோலையை எடுத்து வந்து எதிரிக்கு எதிரான பொய்யான புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த பணமும் தரவேண்டியது இல்லை என்றாலும், அவ்வாறு தரவேண்டும் என்று எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.